**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 486 of 2023**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : ராகவி** | **Father/Husband's Name : முத்துகிருஷ்ணன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 09.09.2025.**

**Accused A1 absent. 317 Cr.P.C. Petition filed and allowed. A2 to A5 PAD. Learned Counsel for A2 to A5 present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது புதுஆயக்குடியில் குடியிருந்து கூட்டுறவு வங்கியில் பயிற்சி பெற்று வருகிறேன். எதிரி முத்துகிருஷ்ணன் எனது கணவர். எதிரி தர்மர் எனது மாமனார். எதிரி வெள்ளதாய் எனது மாமியார். வேலுசெல்வி எனது நாத்தனார். கோகுலகிருஷ்ணன் எனது கொழுந்தனார் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2017ம் வருடம் எனது தந்தை திருப்பூர் தீயணைப்பு துறையில் பணிபுரிந்து வந்தார். அப்போது நாங்கள் போலிஸ் குடியிருப்பில் வசித்து வந்தபோது எங்களது குடியிருப்பிற்கு அருகில் உள்ள முத்துகிருஷ்ணன் என்பவர் எனக்கு அறிமுகம் ஆனார். நாங்கள் இருவரும் 2019ம் வருடம் முதல் காதலித்து வந்தோம். பின்னர் எங்களது வீட்டார் சம்மதத்தை கேட்டபோது எங்களது வீட்டில் எனது அப்பா, அம்மா திருமணத்திற்கு ஒத்து கொண்டார். பின்னர் எனது கணவரின் வீட்டாரிடம் பேசுவதாக தெரிவித்திருந்தார். 17.08.2021ம் தேதி நானும், முத்துகிருஷ்ணனும் கொடைகானலுக்கு சென்றிருந்தபோது அவர் என்னுடன் உல்லாசமாக இருந்தார். பின்னர் நான் அக்டோபர் மாதம் கருவுற்றிருந்தேன். மேற்படி தகவலை எனது கணவரிடம் தெரிவித்தபோது அவர் நான் கருவுற்றிருந்த கருவை கலைத்து விடுமாறும் எனக்கு போன் மூலம் மிரட்டினார். நான் அதற்கு மறுப்பு தெரிவித்து திருமணம் செய்து கொள்ளுமாறு அவரிடம் கேட்டபோது அவர் திருமணம் செய்வதாக எனக்கு வாக்குறுதி அளித்தார். பின்னர்

29.11.2021ம் தேதி அன்று பழனி அடிவாரம் பாத விநாயகர் கோவில் அருகில் உள்ள சுந்தரம் மீனாட்சி கோவிலில் திருமணம் செய்து கொண்டோம்.

2. பின்னர் நான் எனது வீட்டிலும், எனது கணவர் வீட்டிலும் தகவல் தெரிவிக்க சொன்னபோது அவர் எனது மாமனாரிடம் திருமணம் செய்து கொண்டோம் என சொன்னபோது அவர்கள் எனது திருமணத்தை ஏற்காமல் 50 பவுன் நகை வரதட்சனையாக வேண்டும் இல்லையென்றால் எனது மகனுக்கு இரண்டாவது திருமணம் செய்து வைப்போம் என என்னிடமும், எனது கணவரிடமும் போனில் பேசினார்கள் மற்றும் எனது கணவர் முத்துகிருஷ்ணனுக்கு ஜாதகத்தில் 2-திருமண வாய்ப்பு இருப்பதாக இருந்ததால் வேறு திருமணம் செய்து வைத்து விடுவோம் என என்னை மிரட்டி வரதட்சனை கேட்டார்கள். பின்னர் எனது கணவரின் அக்காவான வேலுசெல்விக்கு செல்போன் மூலம் அழைத்து கருவுற்றதை சொன்னபோது அவர் கருவை களைத்துவிட்டு நீ வேறு யாரையாவது திருமணம் செய்து கொள் என கூறிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார். பின்னர் நான் எனது கணவரை அழைத்து கொண்டு எனது வீட்டிற்கு சென்றபோது வீட்டில் எனது கணவர் எனது பெற்றொரிடம் 10 நாட்கள் கழித்து எனது கணவரின் பெற்றோர் சம்மந்தத்துடன் வருவதாக கூறிவிட்டு சென்றுவிட்டார். எனது கணவர் அன்று கரு கலைக்கும் மாத்திரை கொடுத்து என்னை சாப்பிட சொன்னார், நான் சாப்பிடவில்லை. அதற்குபிறகு எனது கணவர் மாம்பழ ஜூஸ் வாங்கி கொண்டு தந்தபோது நான் அதை குடித்துவிட்டேன். அதற்கு பிறகு தான் மறுநாள் எனக்கு வயிற்றுவலி அதிகமாக ஏற்பட்டு கரு கலைந்துவிட்டது. அதற்கு பிறகு தான் ஜூஸ்-ல் கரு கலைக்கும் மாத்திரை கலந்து கொடுத்துள்ளார் என்று எனக்கு தெரிந்தது. பின்னர் பழனியில் உள்ள அமுதவள்ளி கிளினிக்கு சென்று சிகிச்சை அளித்து கொண்டோம். அடுத்த நாள் எனது கணவர் நான் கருவை கலைப்பதற்காக தான் திருமணம் செய்து கொண்டேன் எனவும் எனது கணவர் கட்டிவிட்டது தாளி கயிறு அல்ல, வெறும் கயிறு தான் என்று எனக்கு குறுஞ்செய்தியை எனது செல்போன் எண் 9345774010 என்ற எண்ணிற்கு எனது கணவரின் செல்போன் எண் 8870852425 என்ற எண்ணில் இருந்து அனுப்பினார். நான் அதன் Screenshot ஐ வைத்திருக்கிறேன்.

3. எனது கணவர் குழந்தையை கலைக்க வேண்டும் என்று சொல்லி என்னிடம் போன் மூலம் 24.11.2021ல் இருந்து பேசினார். எனது கணவர் குழந்தையை கலைக்க வேண்டும் என்று போனில் பேசிய Audio record ஐ வைத்திருக்கிறேன். பின்னர் எனது கணவரின் தந்தையாருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் விடுப்பு எடுத்துக் கொண்டு தேனிக்கு சென்றுவிட்டார். பின்னர் எனது அழைப்புகளுக்கு செவி சாய்க்கவில்லை. எனது செல்போன் என்னை Block செய்துவிட்டார். பின்னர் அனைத்து மகளிர் காவல் நிலையம் பழனியில் 06.01.2022ம் தேதி எனது கணவருடன் சேர்த்து வைக்குமாறு புகார் அளித்தேன். அவரை விசாரணைக்கு அழைத்து அவர் ஆஜரான போது மேற்படி என்னுடன் இருந்ததை ஒப்புக் கொண்டு கைப்பட எழுதி சேர்ந்து வாழ்வதாக கூறி 05.02.2022ம் தேதி என்னை திருப்பூர் தீயணைப்பு துறை குடியிருப்பிற்கு அழைத்து சென்றார். அங்கு திருமணம் ஆனவர்களுக்கு தான் குடியிருப்பு வழங்க வேண்டும் என்று சொன்னதால் திருமணத்தை பதிவு செய்ய தீயணைப்பு துறை அலுவலர்கள் கேட்டதால் நாங்கள் வெளியே காந்தி நகரில் 7வது வீதி, பத்மாவதி புரத்தில் குடியிருந்தோம். பின்னர் நான் ஏற்கனவே கொடுத்த புகாருக்கு எனது கணவரின் பெற்றோர் வராததால் போலிசார் தேனி சென்று விசாரணை செய்தார்கள். பின்னர் எனது கணவர் மேற்படி புகாரை வாபஸ் பெற சொல்லி என்னை அடித்து, என்னுடைய புடவையில் தீ வைத்தார்கள். மேற்படி என்னை கொடுமைபடுத்தியதற்கு எனது கணவரின் பெற்றோர் தூண்டுதலின்பேரிலே எனது கணவர் என்னை கொடுமைபடுத்தினார். பின்னர் நான் குடியிருந்த காந்தி நகர் வீட்டின் உரிமையாளரிடம் எனது மாமியாரும், நாத்தனாரும் அழைபேசியில் அவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டாம் துரத்திவிடுங்கள் என வீட்டு உரிமையாளரிடம் தெரிவித்தார். பின்னர் எனது மாமியார், கொளுந்தனார், எனது கணவரின் அத்தை நேரடியாக எனது கணவர் பணிபுரியும் திருப்பூர் தீயணைப்பு நிலையத்திற்கு நேரில் வந்து என்னுடன் வாழ வேண்டாம் என எனது கணவரிடம் சொல்லி அவரை வற்புறுத்தினார்கள். தீயணைப்பு நிலையத்தில் இருந்து என்னை அழைத்து செல்லும்போது அங்கு Camera ல் பதிவு ஆனதால் அப்போது எனது மாமியார் என்னை அழைத்து செல்லும்போது தூக்கு போட்டு இறந்துவிட்டாலோ, எங்காயவது விழுந்து இறந்துவிட்டாலோ நாங்கள் பொறுப்பாக மாட்டோம் என அலட்சியமாக மிரட்டும் வகையில் சொன்னார். பின்னர் எனது கணவருக்கு வெளியே ஊட்டிக்கு Outduty க்கு பணிமாறுதல் செய்ததால் அவர் அங்கு

சென்றுவிட்டதால் என்னை எனது அப்பாவிடம் சொல்லி எனது வீட்டிற்கு அழைத்து செல்லுமாறு எனது அப்பாவிடம் வலியுறுத்தினார்கள்.

4. மேற்படி நான் குடியிருந்த வீட்டில் எனது கணவர் கத்தியை வைத்து துன்புறுத்தியதால் வீட்டை காலி செய்ய சொன்னார்கள். பின்னர் நான் எனது அப்பாவிடம் பழனிக்கு வந்துவிட்டேன். பின்னர் ஒரு வாரம் கழித்து எனது கணவர் அழைப்பதாக சொல்லிவிட்டு ஒரு வாரம் கழித்து நான் அழைத்தபோது எனது கணவர் 50 பவுன் நகையை வரதட்சனையாக கொடுத்தால் தான எனது அப்பாவும், அம்மாவும் ஏற்று கொள்வதாக தெரிவித்தார். பின்னர் எனக்கு Period தள்ளி போனதால் அதை எனது மாமியாரிடம் சொன்னேன். ஆனால் எனது மாமியார் அதற்கு DNA Test செய்ய வேண்டும் என்று சொன்னார். அதற்கு பிறகு Blood Test செய்து பார்த்தபோது Pregnency Negative என்று வந்தது. எனது கணவர் வருவார் என்று காத்திருந்தபோது வரவில்லை என்பதால் தேனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனது கணவர் விசாரணைக்கு ஆஜராகி ஒரு வாரம் கால அவகாசம் வேண்டும் என்று எழுதி கொடுத்தார். அதற்கு பிறகு புகாரை திரும்ப பெற்றால் தான் எனது கணவர் என்னுடம் சேர்ந்து வாழ்வேன் என்று சொன்னார். அதற்கு பிறகு நான் மகளிர் உதவி எண் மூலம் புகார் கொடுத்ததால் எனது கணவர் வந்து என் முன்னிலையில் அவரது அப்பாவிற்கு போன் செய்தபோது எனது மாமனார் சேர்ந்து வாழ முடியாது சரிபட்டு வராது என்று சொல்லிவிட்டார். எனது கணவர் மகளிர் உதவி மையத்தில் கடிதம் மூலம் என்னை அழைத்து செல்வதாக எழுதி கொடுத்துவிட்டு சென்றார். அந்த கடித நகல் என்னிடம் உள்ளது. வெளியே வந்தவுடன் அவர் அம்மா, அப்பா சொல்லும் பெண்ணை தான் திருமணம் செய்து கொள்வேன் என்று என்னிடம் சொன்னதால் நான் திருப்பூர் தீயணைப்பு நிலையத்தில் வைத்து நான் விசம் குடித்துவிட்டேன். அதனால் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். அதற்கு பிறகு எனது பெற்றோர் வீட்டிற்கு பழனிக்கு வந்துவிட்டேன். அதற்கு பிறகு எனது கணவர் திரும்பி வருவார் என்று மூன்று மாதங்கள் காத்திருந்தேன். அப்போது எனது கணவருக்கு வேறு பெண்ணுடன் திருமண ஏற்பாடு செய்வதாக உறவினர் ஒருவர் சொன்னார். நான் எனது கணவரின் அக்கா மீனாவின் கணவர் கமலக்கண்ணனுக்கு போன் செய்து கேட்டேன். அப்போது கமலக்கண்ணன் எனது கணவருக்கு வேறு பெண்ணுடன் திருமணம்

செய்வதாக சொன்னார். பழனியில் ஒரு வழக்கறிஞர் ஒருவரை வைத்து பேசுவோம் என்று எனது கணவர் என்னிடம் சொன்னதால் நான் அங்கு சென்றபோது எனது கணவரின் குடும்பத்தார்கள் அங்கு வந்து நகை, பணம் வேண்டும் என்றும் என்னை அசிங்கமாக பேசி எனது கொழுந்தனார் மற்றும் எனது கணவரின் குடும்பத்தார் அடிக்க வந்தார்கள். வக்கீல் அலுவலகத்தில் வைத்து பேசிய Audio பதிவு எனது செல்போனில் பதிவு செய்தேன். நான் எனது கணவரிடம் கேட்டபோது நான் என்னுடன் வாழ்வதாக சொல்லிதான் திருமணம் செய்தீர்கள் நான் புகார் கொடுப்பேன் என்று சொன்னபோது எனது கணவர் 15 நாளில் வெளியே வந்துவிடுவேன் என்று மிரட்டினார். பின்னர் நீதிமன்றம் மூலம் மனு செய்து வழக்கு தாக்கல் செய்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.**

**முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.09.09 18:42:32 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**